<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

**நாள்** 06.02.2025

**அசல் வழக்கு எண் 136/ 2022**

**வா.சா. 1 - முருகன் த/பெ. வடிவேல்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் என்னுடைய தாத்தா சொத்தில் பாகம் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாத்தாவின் சொத்தில் பாகம் வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் வழக்கு சொத்து தாத்தாவின் சொத்து என்று காட்டுவதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் உத்திரமேரூரில் உள்ளது. சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்து கிராம நத்தம் இடம் என்றால் சரிதான். தாவா சொத்து உங்கள் தந்தையும் அவருடைய சகோதரர்களும் வாய்மொழியாக பாகப்பிரிவினை குறித்துக் கொண்டதாக வழக்கில் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். ஆனால் வழக்கில் தாவா சொத்து உங்களுடைய பூர்வீக சொத்து என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களுடைய வழக்கில் முன்னுக்கு பின்னாக அதாவது பாகப்பிரிவினை வாயிலாக கிடைத்ததாகவும் மற்றும் பூர்வீக சொத்து என்றும் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை. உங்களுடைய தந்தை அவருடைய சகோதரரிடமிருந்து சில சொத்துக்களை கிரயம் வாங்கி உள்ளார் என்றால் சரிதான். தற்பொழுது தாவா சொத்தில் முதல் பிரதிவாதி வசந்தா என்கிற வசந்தகுமாரி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். உங்கள் உடன் பிறந்த சகோதரர்கள் எத்தனை பேர் என்றால் நான்கு பேர் அவர்கள் முறையே **1.**பெருமாள், **2.**கிருஷ்ணன் **3.**நான் முருகன், **4.** சண்முகம் ஆகிய நான்கு பேர் ஆவோம். இவர்களில் பெருமாள் உங்கள் அப்பாவின் முதல் மனைவிக்கு பிறந்த மகன் என்று சொன்னால் சரி இல்லை என்னுடைய அம்மாவிற்கு தான் அவரும் பிறந்தார். என் அப்பாவிற்கு மூன்று மனைவிகள் நாங்கள் அனைவரும் ஒரு தாய் பிள்ளையான சரோஜாவுக்கு தான் பிறந்தோம். கடந்த **21 12 1992** இல் உங்களது அண்ணன் கிருஷ்ணன் என்பவருக்கு உங்களுடைய அப்பா தாவாசொத்தின் சில கிரயம் பெற்ற சொத்துக்களை செட்டில்மெண்ட் ஆவணம் வாயிலாக எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

தேதி ஞாபகம் இல்லை எழுதி கொடுத்தது உண்மைதான். அதேபோல் கடந்த **17 5 1991** இல் உங்களுடைய அப்பா தாவாசொத்தின் சில கிரயம் பெற்ற சொத்துக்களை செட்டில்மெண்ட் ஆவணம் வாயிலாக எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படுகின்ற ஆவணம் உங்கள் அப்பா உங்களுக்கு எழுதிய செட்டில்மெண்ட் ஆவணம் என்று சொன்னால் சரிதான். அவ்வாணத்தில் நார்புற எல்லைகள் கூறும் இடத்தில் எனது மனைகளுக்கு கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தானது உங்கள் அப்பாவின் சுய சம்பாத்திய சொத்து என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T. Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.